செ.வெ.எண் : 23/ ஏப்ரல்　　　　　　　　　　　　　　　நாள் : 24.04.2021

**இராமநாதபுரம் மாவட்டம்**

**பட்டணம்காத்தான பகுதியில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு**

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியம், பட்டணம்காத்தான் பகுதியில் இன்று (24.04.2021) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், இ.ஆ.ப., அவர்கள் கொரோன தடுப்பு நடவடிக்கைகளை நேரில் ஆய்வு செய்தார்.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.இ.கார்த்திக்,இ.கா.ப., சுகாதாரத்துறை துணை இயக்குநர் மரு.பொற்கொடி ஆகியோர் ஊடுனிரந்துனுர்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவலை தடுப்பதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் தற்போது 510 நபர்கள் (Active Cases) வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். மாவட்டத்தில் நோய்த்தொற்றால் பாதிக்கப்படுபவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் கல்லூரிகள், தனியார் ஆஸ்பத்திரிகள், அரசு ஆஸ்பத்திரிகள், கொரோனா பாதுகாப்பு மையங்கள் போதிய படுக்கைகளுடன் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன. கொரோனா சிகிச்சைக்காக போதிய ஆக்சிஜன் சிலிண்டர் மற்றும் வெண்டிலேட்டர் கருவிகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இதுவரை 49,177 நபர்களுக்கு முதல் தவனை தடுப்பூசியும், 10,032 நபர்களுக்கு இரண்டு தவனை தடுப்பூசியும் போடப்பட்டுள்ளன.

கொரோனா பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் தமிழ்நாடு அரசு ஞாயிற்றுக்கிழமை பொது ஊரடங்கு மற்றும் பிற நாட்களில் இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணி வரை ஊரடங்கு உள்ளிட்ட பல்வேறு கட்டுப்பாடுகளை அறிவித்துள்ளது. இத்தகைய கட்டுப்பாடு நடவடிக்கைகளை முறையே நடைமுறைபடுத்திடவும், கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை கண்காணித்திடவும் மாவட்டத்தில் மொத்தம் 27 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பொது மக்கள் அரசு மேற்கொள்ளும் நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மண்டபம் ஊராட்சி ஒன்றியம், குயவன்குடியில் உள்ள தனியார் பயிற்சி மைய கட்டிடத்தில், கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கூடுதல் படுக்கை வசதிகளுடன் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு மையத்தில் நேரில் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது, வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**